**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 30.09.2019 (பிற்பகல்)**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
•••••••••

**வழக்கு எண்.SA 9696/E/2018**

திருமதி S.சாந்தி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மானாமதுரை வட்டம்,
சிவகங்கை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 05.10.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 29.10.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 17.12.2018 |

******

**ஆணை**

இன்று (30.09.2019) பிற்பகலில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திருமதி S.சாந்தி ஆஜரானார்.

மேல்முறையீட்டாளருடன் திரு கிருஷ்ணன் என்பவரும் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி பா.உமா மகேஸ்வரி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், மானாமதுரை வட்டம், சிவகங்கை மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 05.10.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மானாமதுரை கிராமப் புல எண்.235/1A1 மற்றும் 235/1A2, பட்டா எண்.185-லிருந்து புதிய பட்டா எண்.2376-க்கு 15.07.2016-ல் மாறியுள்ளது எப்படி, அந்த உத்திரவின் நகல், கணினி மூலம் பட்டா மாறுதல் விண்ணப்பம் கொடுத்து மாற்றும்போது அதில் மோசடி, பிழை, குழுப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா, இல்லையா, கிராமக் கணக்கில் பட்டா அடங்கல் புத்தகத்தில் பட்டா எண்.185-க்கு உரிய பக்கம் காணாமல் போய் இருப்பது உண்மையா, பொய்யா, உரிய பக்கம் இருப்பது உண்மையானால் அதன் நகல், கிராமப் புல எண்.235/1A1A மற்றும் 235/1A1B எனப் பிரிக்கப்பட்டிருப்பது உண்மையா, இல்லையா, மேற்படி புல எண்.238/1A2 மற்றும் 235/1A2B எனப் பிரிக்கப்பட்டிருப்பது உண்மையா, இல்லையா, கிராமக் கணக்கில் மேற்கண்ட உட்பிரிவுகள் லூர்து உடையார் மகன் ஜெயசீலன் என்பவரது பெயரில் பதிவாகி இருந்ததா, இல்லையா, ஏற்கெனவே ஏற்பட்டிருந்த உட்பிரிவுகள் எல்லாம் ஒடுங்கி புதிய பட்டா எண்.2376-ல் பட்டா எண்.185 கருப்பையா வேளார் பெயரிலிருந்து லூர்து உடையார் மகன் ஜெயசீலன் மனைவி ஆரோக்கிய செல்வி மஞ்சுளாவுக்கு மாறியது எப்படி, 15.06.2017 அன்று பணிபுரிந்த மானாமதுரை வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், நில அளவர் யாவர், தற்போது எங்கு பணிபுரிகின்றனர், அவர்கள் தவறு செய்திருக்கும்பட்சத்தில் அவர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்க என்ன செய்ய வேண்டும் என 9 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், மானாமதுரை என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 03.10.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 29.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், மானாமதுரை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தக்க நடவடிக்கை எடுத்து தான் கோரிய தகவல் கிடைக்கச் செய்ய வேண்டுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 17.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (30.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு

மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் இனம் 1-ல் கோரியுள்ள ஆவணங்கள் தங்களது அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லையென்றும், இனம் 4 தொடர்பான கிராமச் சிட்டாவில் பட்டா எண்.185 பதிவு செய்யப்பட்டுள்ள பக்கம் இல்லையென்றும், இனம் 2, 3, 5, 6, 7 மற்றும் 8 ஆகியவற்றிற்குத் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(f)-ன்கீழ் தகவல் வழங்க மார்க்கமில்லையென்றும், இனம் 9-ல் யூகத்தின் அடிப்படையில் தகவல் கோரியுள்ளதாகவும், அதனையே 03.10.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்குத் தகவலாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. வாத, பிரதிவாதங்களிலிருந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்ததிலிருந்தும் மேற்படி மானாமதுரை வட்டம், மானாமதுரை கிராமம் தொடர்பான 10-1 சிட்டா என்னும் கிராமக் கணக்குகளைக் கையாளுவதில் முறைகேடு நடந்துள்ளதென்றே ஆணையம் தீர்மானிக்கின்றது. கிராம அலுவலகத்திலும், வட்ட அலுவலகத்திலும் பராமரிக்கப்பட்டுவரும் கிராம 10-1 சிட்டா என்ற பதிவேட்டில் பட்டா எண்.185 குறித்த தகவல் காணாமல் போய்விட்டதென்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தது ஏற்புடையதில்லையென்றே ஆணையம் தீர்மானிக்கின்றது. இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **மேல்முறையீட்டாளர் 05.10.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவல் தொடர்பாக, மேற்படி கிராமத்திற்கான வட்டம் மற்றும் கிராமத்தில் பராமரிக்கப்பட்டுவரும் சிட்டா பதிவேடுகளைப் பரிசீலித்து, மேற்படி 185 பட்டா நகலினை வழங்க நடவடிக்கை எடுக்கவும், தொடர்புடைய பட்டா பக்கம் மட்டும் காணாமல் போயிருந்தால் அது குறித்து, அதற்குச் சம்பந்தப்பட்ட அலுவலரைக் கண்டறிந்தும், மேற்படி நபர்கள் மீது உரிய நடவடிக்கை தொடர்ந்து, அது குறித்த தகவலை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு வருவாய் கோட்டாட்சியர், சிவகங்கை அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை**

**தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**
**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 9696/E/2018**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

வருவாய் கோட்டாட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சிவகங்கை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மானாமதுரை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

**மனுதாரர்**

திருமதி S.சாந்தி,
க/பெ. சாத்தையா (லேட்),
35, குலாலர் தெரு,
மானாமதுரை - 630 606.
சிவகங்கை மாவட்டம்.

Copy to: Judgement File.
04/10/19